[1973 நவம்பர் 24

**திரு. கே. எ. வகாப் :** இப்பொழுது விவசாயிகளுக்கு வழங்கப் படுகிற டீசல் என்ஜின்களுக்காக 1,000 ரூபாய் மானியம் வழங்கப் படுவதாகச் சொன்னார்கள். அந்த மானியம் எல்லா மாவட்டங் களிலே உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறதா? உற்பத்தியைப் பெருக்கி வருகின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ளவர் களுக்கும் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதைத்தான் நான் குறிப்பிட்டேன், 3,975 என்று. எல்லா மாவட்டங்களுக்குந் தான் வழங்கப்படுகிறது. வட ஆற்காடுக்கு 22 எஞ்சின்கள், செங் கற்பட்டுக்கு 11, திருச்சிக்கு 304, தென் ஆற்காடு 973, மதுரை 108, இராமநாதபுரம் 7, சேலம் 151, தர்மபுரி 177, தஞ்சாவூர் 2,090, திரு நெல்வேலி 117, கன்னியாகுமரி 10 என்ற அளவில் வழங்கப்பட்டு இருக்கின்றன.

## வந்தவாசி வழியாக விரைவுப் பேருந்துகள்

*** 386 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னையிலிருந்து நாகப்பட்டினம், திருச்சி செல்லும் துரித வண்டிகளை வந்தவாசி நகரின் (வட ஆர்க்காடு) வழியாக செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இது நீண்டநாளையக் கோரிக்கை. இங்கே வந்தவாசி, காஞ்சிபுரம், திண்டிவனம் ஆகிய ஊர்களை இணைப்பதற்கு நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. ஆகவே, அரசு துரித வண்டிகளை நாகூர் போன்ற இடங்களுக்கு—நாகூர் ஒரு புனித ஸ்தலமாக இருப்பதால் அதிகமாகப் பிரயாணிகள் செல்வ தற்கான வாய்ப்பு இருக்கிறது, எனவே, அரசு இதையெல்லாம் பரிசிலனை செய்து விரைவுப் பேருந்துகள் அவ்வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கூடுமானவரையில் நேரான வழித்தடங்களிலே விடுவதுதான் சாலப் பொருத்தமான தாகும். அந்த நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 24 கிலோமீட்டர்

*1973 நவம்பர் 24]*

தொலைவிலே உள்ள வந்தவாசி வழியாக சென்னையிலிருந்து நாகப் பட்டணத்திற்கும், திருச்சிக்கும் போகின்ற பேருந்துகளை மாற்றிச் செல்லச் செய்தால் அதனால் பயண நேரத்தையும் அது அதிக மாக்கும், பயணக் கட்டணத்தையும் அது அதிகமாக்கும்.

### திருக்கோயிலூர்-பெங்களூர் விரைவுப் பேருந்துகள்

* 387 வினா—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கோயிலூரிலிருந்து பெங்களூருக்கு செல்வதற்கு அரசு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவர் அவர்களே, பெங்களூர், மைசூர் மாநிலத்தில் உள்ள ஒரு அழகிய நகரம். அதைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிலேயிருந்து குறிப்பாக திருக்கோயிலூருக்கு அருகிலே யுள்ள அதிகமான கிராமங்களிலிருந்து மக்கள் செல்கிறார்கள். இப் பொழுது பெங்களூருக்கு தனியார் பஸ்கள்தான் போய்க்கொண்டி ருக்கின்றன. இட நெருக்கடி காரணமாக அவர்களும் குறிப்பிட்ட டிக்கட்டுகள் மட்டும் தான் ஏற்றுகிறார்கள். இதனால் பஸ்ஸில் இடம் கிடைக்காமல் அந்தக் கிராமங்களிலேயுள்ள மக்கள் எல்லாம் அவதிப்படுகிறார்கள். எனவே, இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது அழகிய நகரம் என்பதை நான் மறுக்கவில்லை. புதுவையி லிருந்து பெங்களூருக்குப் போகின்ற விரைவுப் பேருந்துகள், தமிழ் நாடு அரசின் சார்பிலே இரண்டு விடப்படுகின்றன ; மைசூர் மாநில போக்குவரத்து கார்ப்பரேஷன் சார்பிலே இரண்டு பேருந்துகள் விடப்படுகின்றன. அவைகளே அந்தப் பகுதிப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.